# மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு அவர்களின்
# செயல்முறை நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர்– திரு.ச.அருண்ராஜ், இ.ஆ.ப.,

**செ.மு.ந.க.எண். 297 /அ1/2024** **நாள். .03.2024**

பொருள்– சமூக நலம் – மாவட்ட சமூகநல அலுவலகம், செங்கல்பட்டு – **பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்** (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 – பாதிக்கப்பட்ட பெண்கள் எளிதில் புகார் அளிக்க ஏதுவாக வட்டம் / வட்டாரம் / நகராட்சி / மாநகராட்சி / பேரூராட்சி அளவில் அளவில் புகாரினை பெற பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) நியமனம் செய்து ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை– சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.003325/SHEW/2024, நாள்.07.03.2024

******

**ஆணை–**

பார்வையில் காணும் கடிதத்தின்படி, **பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்** (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013–ன்படி பணிபுரியம் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் குறித்து பாதிக்கப்பட்ட பெண்கள் எளிதில் புகார் அளிக்க ஏதுவாக வட்டம் / வட்டாரம் / நகராட்சி / மாநகராட்சி / பேரூராட்சி அளவில் பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பின்வரும் அலுவலர்களை **பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்** (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013–ன் கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில் வட்டம் / வட்டாரம் / நகராட்சி / மாநகராட்சி / பேரூராட்சி அளவில் பொறுப்பு அலுவலர்களாக (Nodal Officers) நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| S. No | Level | Nodal Officer Designation | Area |
|---|---|---|---|
| 1 | Divisional Level | Revenue Divisional Officer | 1. Chengalpattu<br>2. Madurantakam<br>3. Tambaram |
| 2 | Taluk Level | Taluk Head Quarters Tahsildar | 1. Chengalpattu<br>2. Thiruporur<br>3. Thirukazhukundram<br>4. Madurantakam<br>5. Cheyyur<br>6. Tambaram<br>7. Pallavaram<br>8. Vandalur |
| 3 | Block Level | Block Development Officer | 1. Acharapakkam<br>2. Chithamur<br>3. Kattankolathur<br>4. Lathur<br>5. Madurantakam<br>6. Thirukazhukundram<br>7. Thiruporur<br>8. St. Thomas Mount |
| 3 | Municipality Area | Municipal Commissioner | 1. Chengalpattu<br>2. Madurantakam<br>3. Maraimalai Nagar<br>4. Nandivaram–Guduvanchery |
| 4 | Town Panchayat Area | Executive Officer | 1. Acharapakkam<br>2. Edakazhinadu<br>3. Karunkuzhi<br>4. Mamallapuram<br>5. Thirukazhukundram<br>6. Thiruporur |
| 5 | Corporation Area | Assistant Commissioner | 1. Zone 1 – Pammal<br>2. Zone 2 – Pallavaram<br>3. Zone 3 – Sembakkam<br>4. Zone 4 – Perungalathur<br>5. Zone 5 – East Tambaram |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) பணியிடங்களில் பாலியல் துன்புறத்தலால் பாதிக்கப்பட்ட பெண்களிடமிருந்து பெறப்படும் புகார்களை பெற்று அதனை ஏழு தினங்களுக்குள் செங்கல்பட்டு மாவட்ட சமூக நல அலுவலகத்தில் உள்ள மாவட்ட அளவிலான புகார் குழுவிற்கு (Local Complaints Committee) அனுப்பி வைத்திட வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் தங்களுடைய அலுவலகம் மற்றும் தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அலுவலகங்கள், தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் அரசு அலுவலகங்கள், தனியார் அலுவலகங்கள், கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், தொழிற் சாலைகள் ஆகியவற்றில் 10 எண்ணிக்கைக்கு மேற்பட்ட பெண் பணியாளர்கள் பணிபுரியும் இடங்களில் **பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013-ன்** படி உள்ளக புகார் குழு (Internal Complaints Committee) அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து அதன் விவரத்தினை மாவட்ட சமூகநல அலுவலருக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
செங்கல்பட்டு மாவட்டம்

11.3.24

2/2

பெறுநர்
சம்மந்தப்பட்ட பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers)